# தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் - 2026

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

## இன்று வேலூர், திருப்பத்தூரில் உரையாற்றுகிறார்!

தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.

இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31-ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், ஐந்தாம் கட்ட பரப்புரையை ஏப்ரல் 13-ஆம் தேதி திருவள்ளூரில் தொடங்கினார்.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இன்று வேலூர், திருப்பத்தூரில் உரையாற்றுகிறார்.



## தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பிரச்சார விவரம்

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| **14.04.2026 (செவ்வாய்க்கிழமை)** | | |
| மாலை 5 மணி | **வேலூர்** (பொதுக்கூட்டம்) | வேலூர், காட்பாடி, அணைகட்டு, கீழ்வைத்தியநாதன்குப்பம், குடியாத்தம் |
| மாலை 7 மணி | **திருப்பத்தூர்** - மண்டலவாடி மைதானம் (பொதுக்கூட்டம்) | திருப்பத்தூர், ஆம்பூர், வாணியம்பாடி, ஜோலார்பேட்டை |
| **15.04.2026 (புதன்கிழமை)** | | |
| மாலை 5 மணி | **தருமபுரி** (பொதுக்கூட்டம்) | பாலக்கோடு, பென்னாகரம், தருமபுரி, பாப்பிரெட்டிப்பட்டி, அரூர் |
| மாலை 7 மணி | **சேலம்** - தேசிய நெடுஞ்சாலை, சீலநாயக்கன்பட்டி (பொதுக்கூட்டம்) | சேலம் மேற்கு, சேலம் வடக்கு, சேலம் தெற்கு, கெங்கவல்லி, ஆத்தூர், ஏற்காடு, ஓமலூர், மேட்டூர், எடப்பாடி, சங்ககிரி, வீரபாண்டி |
| **16.04.2026 (வியாழக்கிழமை)** | | |
| மாலை 5 மணி | **நாமக்கல்** - பொம்மகுட்டைமேடு (பொதுக்கூட்டம்) | நாமக்கல், ராசிபுரம், சேந்தமங்கலம், குமாரபாளையம், பரமத்திவேலூர், திருச்செங்கோடு |
| மாலை 7 மணி | **பெரம்பலூர்** - ஒதியம் பிரிவு, குன்னம் (பொதுக்கூட்டம்) | பெரம்பலூர், குன்னம், அரியலூர், ஜெயங்கொண்டம் |

குறிப்பு: ❖ கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமெனகண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

❖ கழக முன்னணியினர் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தலைவர் அவர்கள் தங்கும் இடத்திற்கு வருவதை தவிர்த்து, பிரச்சாரக் கூட்டத்திற்கு நேரடியாக வருகை தர வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.





கடலூர் கிழக்கு மாவட்டம், குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதி, பூண்டியாங்குப்பம், திருச்சோபுரம், நொச்சிக்காடு, பெரியக்குப்பம், காயல்பட்டு, குண்டியமல்லூர், கொத்தவாச்சேரி உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட கிராமங்களில் குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர், அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார். காங்கிரஸ் எம்.கே.விஷ்ணுபிரசாத் எம்.பி., திலகர், ம.தி.மு.க. என்.இராமலிங்கம், சி.பி.எம். எம்.மாதவன், சி.பி.ஐ. பி.துரை, வி.சி.க. திருமேனி, ஜெயக்குமார், ஒன்றியச் செயலாளர்கள் வி.சிவக்குமார், ஆர்.நாராயணசாமி உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் கலந்துகொண்டு வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டனர்.





கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதி, திருவெண்ணைநல்லூர் கிழக்கு ஒன்றியம், பெரியசேவலை பகுதியில், கழக வேட்பாளர் ஜி.ஆர்.வசந்தவேலை ஆதரித்து பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு 'திராவிட மாடல்' அரசின் 5 ஆண்டு சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துக் கூறி உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார். இதில் கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.